DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 309/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 18th day of November 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 4** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | சந்திரசேகரன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/பெ. | : | வேலு | சமயம் | : | -- |
| வயது | : | 55 | ஜாதி | : | -- |
| தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 18.11.2025</u>
<u>நேரம்: 12.50</u>

எதிரி ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் தற்போது கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 603/2021, U/s. 294(b), 342, 323, 506(1) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.மலைச்செல்வம் அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.07.2021ம் தேதி மாலை 4.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.மலைச்செல்வம் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 சமீஹா என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார்மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 603/2021, U/s. 294(b), 342, 323, 506(1) IPC & 4 of TNPHW Act ன்கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் கனம் நீதிமன்றத்திற்கு

அனுப்பி வைத்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். வாதியின் புகார் அ.சா.ஆ.3 ஆகும்.**

பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகரெத்தினம் மற்றும் கெளரி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆகும்.** அன்றைய தினமே சாட்சிகள் சமீஹா, ராமச்சந்திரன், நாகரெத்தினம், கெளரி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரியை 30.07.2021ம் தேதி பட்டிணம்காத்தான் இ.சி.ஆர் ஜங்சன் அருகே வைத்து கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1ன் விபத்து பதிவேடு பெற்றுள்ளார். **அ.சா.1ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும்**. பின்பு அவரது விசாரணையை முடித்து அதே பிரிவுகளின் கீழ் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு கு.வி:</u>

சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2025.11.18 16:25:19 +0530